## 6th Social Science Lesson 15 Questions in Tamil

## 15. பொருளியல் - ஓர் அறிமுகம்

1. உணவு தேவைக்கும் தொழில் உற்பத்திக்கும் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்வது

**A) முதல் நிலைத் தொழில்கள்**

B) இரண்டாம் நிலைத் தொழில்கள்

C) மூன்றாம் நிலைத் தொழில்கள்

D) மேற்கண்ட எதுவுமில்லை

**(குறிப்பு: வேளாண்மை, கால்நடைகள் வளர்த்தல், மீன்பிடித்தல், கனிமங்கள், தாதுப் பொருட்கள் போன்ற மூலப்பொருள்கள் சேகரித்தல், கனிகள், கொட்டைகள், தேன், மூலிகைகள், ரப்பர், பிசின் போன்றவை சேகரித்தல், மரம் வெட்டுதல் ஆகியவை முதல் நிலைத் தொழில்கள்.)**

2. தொழில்கள் கீழ்க்கண்ட எவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன?

1. மூலப்பொருள்கள் 2. மூலதனம்

3. உடமை 4. நிலத்தின் அளவு

A) 1, 3, 4 B) 1, 4 C) 1, 2, 4 **D) 1, 2, 3**

3. கூற்று 1: முதல் நிலைத் தொழில்கள் மூலம் சேகரிக்கப்படும் மூலப்பொருள்களில் இருந்து இயந்திரங்கள் மூலம் அன்றாடத் தேவைக்கான பொருட்கள் வரை பெருமளவில் உற்பத்தி செய்தல் இரண்டாம் நிலைத் தொழில்கள் எனப்படும்.

கூற்று 2: இரண்டாம் நிலைத் தொழில்கள் தொழில் துறை என்றும் அழைக்கப்படுகின்றன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

4. கீழ்க்கண்டவற்றுள் வேளாண் அடிப்படைத் தொழிற்சாலைகளில் தவறானது எது?

A) பருத்தி

B) சர்க்கரை

C) உணவு பதப்படுத்துதல்

**D) காகிதத்தொழில்**

5. கீழ்க்கண்டவற்றுள் காடு சார்ந்த தொழிற்சாலை எது?

A) இரும்பு

B) ரப்பர்

**C) மரச்சாமான்கள்**

D) சிமெண்ட்

**(குறிப்பு: காகிதத்தொழில், மரச்சாமான்கள், கட்டுமானப்பொருள்கள் ஆகியவை காடு சார்ந்த தொழிற்சாலைகள் ஆகும்.)**

6. கூற்று 1: சேமிப்பு என்பது கையில் கிடைக்கும் வருமானத்தில் நுகர்வுக்குச் செலவு செய்ததுபோக எதிர்காலத் தேவைக்காக ஒதுக்கப்படும் ஒரு தொகையாகும்.
   கூற்று 2: சிமெண்ட், இரும்பு, அலுமினியம் போன்ற தொழிற்சாலைகள் கனிமத்தொழிற்சாலைகள் ஆகும்.
   A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
   B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
   **C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**
   D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு
   **(குறிப்பு: கடல் உணவு பதப்படுத்துதல் கடல்சார் தொழிற்சாலைகளில் வகைப்படுத்தப்படுகிறது.)**
7. "கிராமங்கள் நம் நாட்டின் முதுகெலும்பு" என்று கூறியவர்
   A) பாரதியார்
   B) நேரு
   C) அம்பேத்கர்
   **D) காந்தி**
   **(குறிப்பு: கிராமங்களில் விவசாயம் தான் முதன்மையான வேலையாக இருக்கும். விவசாயம், தொழிற்சாலைகள் எல்லாம் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக உள்ளன.)**
8. கூற்று 1: சேவைத் துறை தொழில்கள், தொழில் துறையில் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் உற்பத்தி பொருள்களை தேவையான மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கும் தேவையான சேவைகளை வழங்குகிறது.
   கூற்று 2: மக்களின் அன்றாடத் தேவைகளையும் சேவைத் துறை வழங்குகிறது.
   A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
   B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
   **C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**
   D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு
   **(குறிப்பு: மூன்றாம் நிலைத் தொழில்கள் சேவை துறை தொழில்கள் என அழைக்கப்படுகின்றன.)**
9. தமிழ்நாட்டில் _________ சதவீத மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர்.
   A) 45 **B) 47** C) 49 D) 51
   **(குறிப்பு: உலக மக்கள் தொகையில் 50 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் நகரங்களில் வாழ்கிறார்கள்.)**

10. பொருத்துக.

| | |
|---|---|
| 1. சிறிய அளவிலான தொழிற்சாலை | i) பண பரிவர்த்தனை |
| 2. காடு சார்ந்த தொழிற்சாலைகள் | ii) தகவல் தொழில் நுட்பம் |
| 3. சேவைகள் | iii) காகித தொழிற்சாலைகள் |
| 4. வங்கி | iv) கால்நடைகள் வளர்ப்பு |

A) ii i iii iv

**B) iv iii ii i**

C) iv ii i iii

D) i iv iii ii

11. பொருளாதார நடவடிக்கைகள் ________ அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.

A) மூலப்பொருள்கள்

B) உடமை

**C) பயன்பாடு**

D) மூலதனம்

**(குறிப்பு: பால்பண்ணை ஒரு கூட்டுறவு துறை ஆகும்.)**

12. கூற்று 1: அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மக்கள் அங்காடியிலிருந்து வாங்கிப் பயன்படுத்தும் பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன.

கூற்று 2: தமிழ்நாடு உற்பத்தி தொழிலிலும் சேவைத் தொழிலிலும் சிறந்து விளங்கும் மாநிலம்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: அரிசி, துணிகள், மிதிவண்டிகள் போன்றவை நுகர்வோர் பொருட்களுக்கு எடுத்துக்காட்டுகள்.)**

13. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை _________

_________ தோன்றாக் கெடும்.

A) செல்வம் இல்லாகி

B) பாடறிந்து வாழாமல்

**C) உளபோல இல்லாகி**

D) செல்வம் செறிந்து

**(குறிப்பு: தன் செல்வத்தின் அளவு அறிந்து அதற்கு ஏற்ப வாழாதவனுடைய வாழ்க்கை பல வளங்களும் இருப்பது போலத் தோன்றி உண்மையில் இல்லாதவனாய்ப் பின்பு அப்பொய்த் தோற்றமும் இல்லாமல் அழியும்.)**

14. பொருத்துக.

| | |
|---|---|
| 1. போக்குவரத்து | i) தகவல் தொழில்நுட்பம் |
| 2. தொலைத் தொடர்பு | ii) ரயில் |
| 3. வர்த்தகம் | iii) பணப்பரிமாற்றம் |
| 4. வங்கி | iv) பொருள்களை கொள்முதல் செய்தல் |

A) ii i iii iv
B) iv iii ii i
C) iv ii i iii
**D) ii i iv iii**

**(குறிப்பு:**

- **போக்குவரத்து - சாலை, ரயில், கடல், ஆகாயப் போக்குவரத்துகள்.**
- **தொலைத் தொடர்பு – அஞ்சல், தொலைபேசி, தகவல் தொழில்நுட்பம்.**
- **வர்த்தகம் – பொருள்களைக் கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல்.**
- **வங்கி - பணப்பரிமாற்றம், வங்கி சேவைகள்)**

winmeen.com